பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 79

நிறுவனத்தின் பெயர் : நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்

குழுவினால் இனம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	குறைபாட்டினைத் திருத்துவதற்கு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை
<u>**முதலாவது பகுதி**</u> 1. உள்ளகக் கணக்காய்வு ஐயவினா ஆவணம் கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை.	இந்த அலுவலகத்தில் மட்டுப்படுத்தப்பட்ட பதவியணியினரே இருப்பதனால் உள்ளகக் கணக்காய்வு அலகினைப் பேணிச் செல்வதற்கு போதியளவு உத்தியோகத்தர்கள் இல்லை.
2. ஆபத்துக்கள் பற்றிய பதிவேடு கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை.	உள்ளகக் கணக்காய்வு அலகு இல்லாத காரணத்தால் ஆபத்துக்கள் பற்றிய பதிவேடு பராமரிக்கப்படவில்லை.
3. நிதி ஒழுங்குவிதி 134 (2) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்தாலோசித்து வருட ஆரம்பத்தில் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தினைத் தயாரித்திருக்காமை.	உள்ளகக் கணக்காய்வு அலகு இல்லாத காரணத்தால் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பசவில்லை.
4. மீளாய்வாண்டினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் குறித்த எண்ணிக்கையில் நடாத்தியிருக்காமை.	உள்ளகக் கணக்காய்வு அலகு இல்லாத காரணத்தால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை.
<u>**இரண்டாம் பகுதி**</u> 1. நிறுவனத்தினால் பேணி வரப்படுகின்ற வெப்தளம் மூலமாக பொதுமக்களுக்கு முறைப்பாடுகள் அல்லது பாராட்டுகளைக் குறிப்பு பதிவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருக்காமை.	அதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றோம்.
2. நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான, ஒப்புதலளிக்க மறுக்கின்ற அல்லது பாதகமான மட்டத்தில் நிலவுகின்றமை.	கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்கு அமைய, நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம், முனைப்பழியுள்ள அபிப்பிராயமாக குறிப்பிடப்படும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில், அந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியின் விடயங்களிலான தாக்கம் தவிர, உண்மையான மற்றும் நியாயமான நிலைமை பிரதிபலிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில்,

	(அ) எழுத்து மூலக் குறைபாடுகள் - மீண்டும் ஏற்படாது இருக்க நடவடிக்கை எடுக்கின்றோம். (ஆ) முற்பண B கணக்கில் வேறுபாடு - தீர்த்துக் கொள்வதற்கு அரச கணக்கீட்டுத் திணைக்களத்தின் பரிந்துரைக்கு அமைய அனுமதியினை எதிர்பார்த்து இருக்கின்றோம்.
3. ஒட்டுமொத்த பணியாட் தொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்காமை.	தற்போது செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு இருக்காதுடன் எதிர்காலத்தில் அதற்கான நடவடிக்கை எடுக்கின்றோம்.
4. நிறுவனம் தனது விடயப்பரப்பிற்கு இணங்க நிலைபெறுதகு நோக்கங்களை இனம் கண்டிருக்கவில்லை. இனம் காணப்பட்ட நிலைபெறுதகு நோக்கங்களுக்கான இலக்குகளை அடைதலை அளவிடுவதற்கான செயலாற்றுகை இலக்குகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. இனம் காணப்பட்ட நிலைபெறுதகு அபிவிருத்தி நோக்குகளை செயற்படுத்துவதன் மேம்பாட்டினை மதிப்பிடுவதற்கான குறிகாட்டிகள் அமைக்கப்பட்டிருக்கவில்லை.	நிறுவனத்தின் கடமைப் பொறுப்புகளின் தன்மைகளுக்கு ஏற்ப நிலைபெறுதகு அபிவிருத்தி நோக்கங்களை இனம் காண்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றோம்.
5. திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% ஐப் பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது.	கொவிட் தொற்றுநோய் காரணமாக வருடத்தின் முதல் காலாண்டில் உத்தியோகத்தர்களைப் பயிற்சி வேலைத் திட்டங்களில் ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது.
6. 2020.08.28 ஆம் திகதியிடப்பட்ட 02/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையில் 12.1 ஆம் பந்தியின் பிரகாரம் அதன் முன்னேற்றத்தினை அளவிடக்கூடிய 03 செயல்திறன் குறிகாட்டிகள் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை.	நிறுவனத்தின் முன்னேற்றத்தினை அளவிடக்கூடிய செயலாற்றுகை சுட்டியை இனம் காண்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றோம்.

கே.பீ.கே. ஹிரிம்புரேகம

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர்

(ஒம்புட்ஸ்மன்)